பிப். 24ம் தேதி

கலால் தினத்தை புறக்கணிக்க பணியாளர்கள் முடிவு

சென்னை, [illegible]

பதவி உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மத்திய கலால் துறை பணியாளர்கள் வரும் 24ம் தேதி கலால் தினத்தை புறக்கணிக்கின்றனர்.

மத்திய கலால் துறையில் பணியாற்றும் பணியாளர்களுக்கு வருமானவரித்துறையில் இருப்பது போல பணியாளர்களின் பதவியை மாற்றி அமைக்க வேண்டும். சுங்கத்துறையில் உள்ள சோதனை செய்யும் அதிகாரிகளுக்கு இணையாக மத்திய கலால் துறை ஆய்வாளர்களுக்கு உதவி ஆணையர் பதவி வழங்க வேண்டும். பதவி உயர்வு அளிப்பதில் உள்ள தேக்க நிலையை போக்க வேண்டும். கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குவதை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி அகில இந்திய அளவில் குரூப்–டி தவிர மற்ற கலால் துறை பணியாளர்கள் வரும் 24ம் தேதி, 'கலால் தினத்தை' அகில இந்திய பொதுச் செயலாளர் ரவிமாலிக் தலைமையில் புறக்கணிக்க முடிவு செய்து உள்ளனர். இந்த தகவலை கலால் துறையின் சென்னை பிரிவின் பொதுச் செயலாளர் சந்திரமவுலி, அகில இந்திய கலால் ஆய்வாளர் சங்கத்தின் செயல் தலைவர் வெங்கிடகிருஷ்ணன் ஆகியோர் தெரிவித்தனர்.